Tamil Translation

TTB/2024/I/P

# 2024 தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப்படிவங்களுக்கு நிகழ்நிலை முறைமை ஊடாக பரிந்துரைகளை வழங்குதல்.

**அதிபர் பரிந்துரை வழங்கும் போது பின்பரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.**

1. www.nstt.moe.gov.lk இணைப்பினூடாக பிரவேசித்து `Login as a principal` ஐ தெரிவு செய்யவும்.
2. தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள user name மற்றும் pass word ஐ சரியாக உள்ளீடு செய்து `Sign in` மூலமாக முறைமையினுள் பிரவேசிக்கவும்.

   2.1 இதுவரையில் user name மற்றும் pass word கிடைக்கப பெறாவிடின் 011-2075854 என்னும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

   2.2 உங்கள் user name மற்றும் pass word என்பன பிரத்தயேகமாக வழங்கப்படுவதுடன் அதன் இரகசியத்தன்மையைப் பேணுதல் உங்களது பொறுப்பாகும். இது குறித்த ஏதாயினும் சிக்கல் ஏற்படின் 011-2075854 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
3. தங்களது பாடசாலையில் சம்பளம் பெறும் 2024 வருடாந்த ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலைச் செயன்முறையில் சமர்ப்பித்த ஆசிரியர்களது பெயர் பட்டியல் திரையில் காட்சிப்படுத்தப்படும்.
4. குறித்த பெயர் பட்டியலில் தங்களது பாடசாலையில் சம்பளம் பெறாத ஆசிரியர்கள் இருப்பின் அது தொடர்பாக 011-2075854 எனும் இலக்கத்திற்கு அறியத்தர முடியும்.
5. ஆசிரியரது பெயருக்கு எதிரே option இன் கீழ் 3 icon கள் காட்சியளிக்கும்.

   5.1. முதலாம் icon மூலம் உரிய ஆசிரியரது விண்ணப்பப் படிவத்தை பரீட்சிக்க முடியும்.

   5.2. இரண்டாம் icon மூலம் விண்ணப்பப் படிவத்தை பரிந்துரை செய்வதற்காக பிரவேசிக்க முடியும்.

   5.3. மூன்றாம் icon மூலம் அதிபரின் பரிந்துரையுடன் கூடிய பக்கத்தை பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.
6. மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாம் icon மூலமாக பிரவேசித்ததன் பின்னர் தொடர் இலக்கம் 01, 02, 03 இன் கீழ் உரிய ஆசிரியரது தேசிய அடையாள அட்டை இலக்கம், பெயர் மற்றும் தற்போதைய பாடசாலை காட்சியளிக்கும்.
7. தொடர் இலக்கம் 04, மூலம் ஆசிரியரினது நியமனப்பாடம் (13 வருட கல்வி, விஷேட கல்வி அல்லது வேறு பாடவகையா) எனக் குறிப்பிடல் வேண்டும்.

8. தொடர் இல. 05, 06, மற்றும் 07 ஊடாக ஆசிரியரின் இடமாற்ற வகை, பாடம், மற்றும் மொழி மூலம் சரியாக உள்வாங்கப்படல் வேண்டும். ஆசிரியருக்கு பதிலீட்டாளர் வழங்கும் போது இது கருத்திற் கொள்ளப்படும்.

8.1 ஆசிரியரின் வகை ஆரம்பபரிவாயின் 2024 இன் கல்வி வருடத்தில் கற்பிப்பதற்கான தரம் சரியாக குறிப்பிடப்படல் வேவண்டும்.

9. தொடர் இலக்கம் 08 இன் கீழ் ஆசிரியர் பாடசாலைக்கு மிகையானவராக இருப்பின் yes என்பதைத் தெரிவு செய்யவும்.
10. ஆசிரியர் தொடர்பான ஒழுக்காற்று விசாரணை அல்லது கணக்காய்வு விசாரணைகளேதும் இடம்பெறின் தொடர் இலக்கம் 9 வினாவிற்கு yes என்பதைத் தெரிவு செய்யவும்.
11. ஆசிரியரின் இடமாற்றத்திற்காக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விசேட நோய் நிலைமைகள் அல்லது விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகள் இருப்பின் தொடர் இலக்கம் 10 இன் கீழ் yes என்பதைத் தெரிவு செய்யவும்
    11.1. தொடர் இலக்கம் 10 இற்கு yes ஐ தெரிவு செய்வதாயின் specify the disease இன் கீழ் உரிய காரணத்தை தெரிவு செய்யவும்.
12. தொடர் இலக்கம் 11 இன் கீழ் ஆசிரியரை இடமாற்றம் செய்வதற்காக விடுவித்தல் தொடர்பான பரிந்துரையை வழங்க முடியும்.
    12.1. பதிலாளர் சகிதம் விடுவிப்பதாயின் Recommended with successor என்பதை தெரிவு செய்யவும்.
    12.2. பதிலாளர் இல்லாமல் விடுவிப்பதாயின் Recommended without successor என்பதை தெரிவு செய்யவும்.
13. தொடர் இலக்கம் 12 இன் ஆசிரியர் தொடர்பான விஷேட காரணங்கள் இருப்பின் தெரியப்படுத்தவும்.
14. உள்ளீடு செய்த தகவல்களை சரிபார்த்ததன் பின்னர் [save] இன் மீது click செய்யவும்.
15. அனைத்து ஆசிரியர்களுக்கும் பரிந்து வழங்கும் செயற்பாடு நிறைவடைந்ததன் பின்னர் இலக்கம் 5.3 இல் குறிப்பிடப்பட்ட icon மூலமாக குறித்த ஒவ்வொரு ஆசிரியரதும் இடமாற்ற விண்ணப்பப் படிவத்தினையும் அதிபரின் பரிந்துரையுடன் கூடிய பக்கத்துடன் பதிவிறக்கம் செய்து அச்சிட முடியும்.

16. அதிபரின் சிபார்சுடனான வழங்கப்பட்ட படிவத்தில் அதிபரினால் தமது கையொபபம் திகதி மற்றும் நிலமுத்திரை பதிக்கப்படல் வேண்டும். ஆசிரியரினால் அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்ட இடமாற்ற விண்ணப்பப்பத்திரத்தின் இறுதிப்பக்கமாக தாங்கள் மேற்படி இலக்கம் 15 இன் கீழான ஆலோசனைப் படி அச்சிட்ட பக்கத்தை இணைக்க வேண்டும்.
17. ஆசிரியர் விண்ணப்பப் படிவத்துடன் முன்னிலைப்படுத்தும் மேலதிக ஆவணங்கள் அனைத்தினையும் அதிபரின் பரிந்துரைப் படிவத்தின் பின்னர் இணைத்தல் வேண்டும்.
18. அனைத்து இடமாற்றங்களுக்கும் பரிந்துரை வழங்கும் செயற்பாடுகள் நிறைவடைந்ததன் பின்னர் திரையின் கீழ் பகுதியில் காட்சியளிக்கும் Download transfer request list மூலம் பாடசாலையிலிருந்து இடமாற்றத்திற்காக விண்ணப்பித்த அனைத்து ஆசிரியர்களதும் பெயர் பட்டியலை (TTB/2024/01) பதிவிறக்கம் செய்து அச்சிட்டுக் கொள்ள வேண்டும்.
19. இவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்டு அச்சிடப்பட்ட பட்டியலில் அதிபரின் கையொப்பம் , திகதி , நிலமுத்திரை பொறிக்கப்படல் வேண்டும்.
20. விண்ணப்பப் படிவங்களை நிரப்பும் போது மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் தொழில்நுட்பம் சார் பிரச்சனைகள் இருப்பின் 011- 2075854 அல்லது 011-2784434 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தரலாம்.

ஜே.எச்.வீரரத்ன
கல்விப்பணிப்பாளர்,
ஆசிரிய இடமாற்றப்பிரிவு